உ

சிவமயம்

782
3-54

மதுரை மீனுட்சியம்மை

திருமணம்

MADURAI MINATCIYAMMAI TIRUMANAM

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 SEP 1954
MADRAS

குமரன் செந்தமிழ் நூற்பதிப்புக் கழகம்

நி. 40 சபாநாயகர் தெரு, சிதம்பரம்.

1954

இதன் விலை இரண்டணு

29 AUG 1956

உ

சிவமயம்

மதுரை மீனாட்சியம்மை

திருமணம்

காப்பு

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

சொக்க நாதர்

பூவின் நாயகன் பூமகள் நாயகன்
காவின் நாயகன் ஆதிக் கடவுளர்க்(கு)
ஆவி நாயகன் அங்கயற் கண்ணிமா
தேவி நாயகன் சேவடி யேத்துவாம். 1

சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்து நறுங்
 கொன்றையந்தார் தணந்து வேப்பந்
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி
 மாணிக்கச் சுடர்ப்பூ ணேந்தி
விடை நிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு
 மகனாகி மீன நோக்கின்
மடவரலை மணந் துலக முழுதாண்ட
 சுந்தரனை வணக்கஞ் செய்வாம். 2

மீனாட்சி அம்மையார்

பங்கயற்கண் ணரியபரம் பரனுருவே
 தனக்குரிய படிவ மாகி
இங்கயற்கண் அகனுலக மெண்ணிறந்த
 சராசரங்கள் ஈன்றுந் தாழாக்

கொங்கயற்கண் மலர்க்கூந்தற் குமரிபாண்
டியன்மகள்போற் கோலங் கொண்ட
அங்கயற்க ணம்மையிரு பாதப்போ
தெப்போதும் அகத்துள் வைப்பாம். 3

செழியர்பிரான் திருமகளாய்க் கலைபயின்று
முடிபுனைந்து செங்கோ லோச்சி
முழுதுலகுஞ் சயங்கொண்டு திறைகொண்டு
நந்திகண முனைப்போர் சாய்த்துத்
தொழுகணவற் கணிமணமா லிகைசூட்டித்
தன்மகுடம் சூட்டிச் செல்வந்
தழைவுறுதன் னரசளித்த பெண்ணரசி
அடிக்கமலந் தலைமேல் வைப்பாம்.

பாண்டிய நாடு

உலகம் புகழும் உயர்பெருஞ் சிறப்புடைய பாண்டிய நாடு தென்னாட்டிலே மிகுந்த சிறப்புக்களையுடையது. நீர்வளம் நிலவளம் முதலிய பல்வேறு வளங்களாலும் பொலிவு பெற்றது. நெல் முதலிய தானியங்களாலும் கரும்பு, கமுகு, தென்னை, வாழை முதலிய வளந்தரு பொருள்களாலும் என்றும் குறையாத பெருமைபெற்றது. மன்னரும் விரும்பும் மாண்புமிக்க முத்து சங்கு பவழம் முதலிய கடல்படு பொருள்கட்கு உறைவிடமானது. வைகை, தாமிரபரணி முதலிய ஆறுகளால் வளம் பெற்றது. திருக்குற்றாலம் முதலிய இடங்களில் விழும் நீர் வீழ்ச்சிகளால் சிறப்புடையது. இத்தகைய பாண்டிய நாடே செந்தமிழ்ப் பாண்டி நாடு என்று சிறப்பிக்கப்பெற்றது. அந்த நாட்டிற்குத் தலைநகராக அமைந்த மதுரைமாநகரம் பாண்டியநாடு என்னும் மங்கைக்குத் திருமுகம்போல் அமைந்து விளங்குஞ் சிறப்புடையது.

மலையத்துவச பாண்டியன்

பாண்டியர் மரபிலே ஈண்டிய புகழுடன் தோன்றிய மலையத்துவசன் என்பான் பாண்டிய நாட்டரசனாய்

விளங்கினான். அவன் அரசியல் முறைப்படி செங்கோல் செலுத்தினான். காஞ்சனமாலை என்னும் கனங்குழை அவனுக்கு வாழ்க்கைத்துணைவியாக அமைந்து நின்றாள். பன்னெடுங்காலமாகியும் துன்னியமக்கட்பேறு அம்மன்னனுக்கு அமைந்திலது. வேண்டுவார் வேண்டுவதை அளிக்கவல்ல சிவபெருமானை அவன் நாள்தோறும் போற்றி வழிபட்டு வந்தான். மக்கட்பேற்றைப் பெறுவதற்கு மாண்புமிக்க வேள்விகள் பலவற்றை விழைவுடன் செய்தான். ஆயினும் மக்கட்பேறுஎளிதாக அமைந்திலது. இறுதியில் தேவர்கோன் செப்பியபடி மகப்பேற்று வேள்வியைச் சிறப்புடன் செய்து தான தருமங்கள் வழங்கினான்.

மீனாட்சியம்மையார்

மலையத்துவச மன்னனுக்குச் சிவபெருமான் திருவருள் செய்ய எண்ணினார். எல்லாம் வல்ல தம்முடைய இடப்பாகத்திலே இருக்கும் உமாதேவியை ஒரு பெண் குழந்தையாக வேள்வித் தீயிலே தோன்றியருளும்படி செய்தார். தேவியார் மூன்று கொங்கைகளுடன் வேள்வித் தீயில் பிறந்தார். உலக இயற்கைக்குமாறாகப் பெண் பிறந்ததைக் கண்டு பாண்டியன் வருந்தினான். மூன்றாவது கொங்கை கணவனைக் கண்டவுடன் மறைந்து விடுமென்று விண்ணில் இருந்து அருள் மொழி பிறந்தது. அதனைக்கேட்டுப் பாண்டியன் தேறினான். மலையத்துவச மன்னனும் காஞ்சன மாலையும் மட்டிலா மகிழ்ச்சி கொண்டனர். இறைவன் திருவருளைப் பலவாறு புகழ்ந்து போற்றினர். அக்குழந்தைக்குத் தடாதகைப் பிராட்டியார் என்று திருப்பெயரிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அருமை பெருமையுடன் வளர்த்தனர். நாட்கள் பல சென்றன. மலையத்துவச மன்னன் சிவபெருமான் திருவடி நீழலை யடைந்தான். தடாதகைப் பிராட்டியார் பாண்டிய நாட்டு அரசியாய்ச் செங்கோலைச் செம்மையுடன் நடத்தி நின்றார். அம்மையின் ஆட்சியிலே அந்நாடு மாட்சிபெற்று விளங்கியது.

காஞ்சன மாலையின் கவலை

தன் மகளாகத்தோன்றிய தடாதகைப் பிராட்டியின் அரசாட்சித்திறத்தைக் கண்டு காஞ்சனமாலை பெருமகிழ்ச்சியடைந்தாள். நாம் பெற்ற இம்மங்கைக்குத் திருமணம் நடைபெற வேண்டுமே; இவளுக்கு ஏற்ற வரன் இம்மண்ணுலகிலே இருப்பதாகத் தெரியவில்லையே என்று உள்ளக் கவலை கொண்டாள். ஒரு நாள் தன் மகளைப் பார்த்து, "பூங்கொம்பு போல் வாளே! நீ எல்லா நலங்களாலும் இனிது சிறந்து விளங்குகின்றனை; மணஞ்செய்யத்தக்க பருவத்தையும் அடைந்தாய்; இன்னுந்திருமணப்பேறு கூடிவரவில்லையே" என்று கூறினாள். தாயின் மனக் கவலையைக் கண்ட தடாதகைப் பிராட்டியார், "என் தாயே, நீ அதனைக் குறித்துக் கவலைப்படாதே. எல்லாம் ஆக வேண்டிய காலத்திலே ஆகும், நான் திக்குகள் தோறுஞ் சென்று வெற்றிக்கொடி நாட்டி வருகிறேன்" என்று கூறினார். நால்வகைப் படைகளும் புடை சூழத் தேரின் மீது ஏறிப் புறப்பட்டார். மகளிரின் கூட்டமும் தேரேறிப் பிராட்டியைப் பின் தொடர்ந்து சென்றது.

தடாதகைப் பிராட்டியார் திக்குவிசயம்

தேர்கள் வரிசை வரிசையாகச் சென்றன. குதிரைகள் நிரை நிரையாகச் சென்றன. முரசின் ஒலி கடலொலியைப் போல முழங்கியது. அந்தணாளர்கள் வாழ்த்துரை கூறினார்கள். தடாதகைப் பிராட்டியார் முதற்கண் வடநாட்டில் அரசு செய்து கொண்டிருந்த அரசர்களை வென்று அவர்களுடைய செல்வத்தைக் கைப்பற்றினார். பிறகு திக்குப் பாலர்களையும் தேவர் கோனையும் வென்றார். பிறகு திருக்கைலாய மலைக்குச் சென்றார். தடாதகைப் பிராட்டியாரின் படை திருக்கைலை மலையை வளைத்துக்கொண்டது. நந்திதேவர் சிவபெருமானுடைய திருவிளையாடற் குறிப்பை அறிவுப் பார்வையினால் அறிந்துகொண்டார். சிவகணங்கள் தடாதகைப் பிராட்டியோடு போரிட்டுப் புறங்காட்டி

டின. செய்தியை அறிந்த சிவபெருமான் தடாதகைப் பிராட்டியார்க்கு முன்னே எழுந்தருளினார். தடாதகைப் பிராட்டியாருடைய மூன்றாவது கொங்கை மறைந்தது. அச்சம் நாணம் மடம் முதலிய பெண்மைக் குணங்கள் மேலிட அம்மையார் நாணி நின்றார். நிகழ்வினை உணர்ந்த அமைச்சர்களில் ஒருவனாகிய சுமதி என்பான் பிராட்டியைப் பணிந்து, "கொன்றை மாலையை அணிந்தவரும் பேரழகினை உடையவரும் ஆகிய இந்தச் சிவபெருமானே தங்களுக்கு மணவாளர் ஆவார்" என்று கூறினான்.

சிவபெருமான் அருள் புரிதல்

சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாரைப் பார்த்து, "தடாதகைப் பிராட்டியே! நீ எப்பொழுது திக்கு வெற்றியைக் குறித்துப் புறப்பட்டாயோ அப்பொழுது முதல் நாமும் மதுரைப் பதியைவிட்டு நீங்கி உன்னைத் தொடர்ந்து வந்தோம். வருகிற திங்கட் கிழமையன்று மறைகளிற் கூறுகிற முறைப்படி நல் வேளை கூடிய பொழுதிலே உன்னைத் திருமணஞ்செய்ய வருவேம். நீ உன்னுடைய ஊராகிய மதுரையம் பதிக்குச் செல்வாயாக!" என்று திருவாய் மலர்ந்தருளினார். தடாதகைப் பிராட்டியார் சிவபெருமான் மீது தம் ஆருயிரனைய அன்பை வைத்துவிட்டுத் தம் படைகளுடன் திரும்பி மதுரை மாநகரை அடைந்தார். எண்வகை மங்கலப் பொருள்களும் எதிர்வரத் தமது திருமாளிகையிற் புகுந்தருளினார்.

திருமண ஏற்பாடு

அமைச்சர்கள் திருமண ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்கள். திருமணச் செய்தியை எழுதி எல்லா இடங்கட்கும் அனுப்பினார்கள். மணமுரசினை யானையின்மேல் ஏற்றி முழக்கித் திருமணச் செய்தியை மதுரை நகர மக்கள் அனைவருக்குந் தெரியப்படுத்தினார்கள். பிராட்டியாரின் திருமணச் செய்தியைக் கேட்ட

அளவில் மக்கள் அனைவரும் மட்டற்ற மகிழ்ச்சியை அடைந்தார்கள். இறைவன் திருவருளை மனதில் எண்ணிப் போற்றினார்கள். அவர்களுடைய உடல் முழுதும் புளகம் அரும்பியது. மகிழ்ச்சிப் பெருக்கால் துதிப் பாடல்களைப் பாடினார்கள். அழகுக்கு அழகு செய்தலைப்போல அழகிய மதுரை நகரத்தை மேலும் அழகு செய்யத் தொடங்கினார்கள். சந்தனக் குப்பைகளையும் மாலைகளையும் புறத்தில் எறிந்தார்கள். குளிர்ந்த பனிநீரை எங்குந் தெளித்துப் புழுதியை அடக்கினார்கள். மகிழ்ச்சிப் பெருக்கின் மிகுதியால் அவர்கள் தங்கள் அணிகலன்கள் நழுவுதலைக் கூட அறியாராயினர். ஒருவரை ஒருவர் பார்த்துத், "திருமணம் எப்பொழுது?" என்று கேட்பார்கள். அதற்கு மற்றவர்கள், "திங்கட்கிழமை" என்று மறுமொழி கூறுவார்கள். இவ்வாறு கூறியவர்களை மற்றவர்கள் தழுவிக்கொள்வார்கள். சுவர்கள் எல்லாவற்றிற்கும் சுண்ணம் பூசினார்கள். சித்திர வரிசைகளை எல்லா இடங்களினும் நிறுத்தினார்கள். திண்ணைகளைக் குங்குமக் குழம்பால் மெழுகினார்கள். முளைக்குடம் நிறைகுடம் முதலியவைகளை வரிசை வரிசையாக அமைத்தார்கள்; வாயில்களிலே தோரணங்களைக் கட்டினார்கள். நீண்ட தெரு முழுவதற்கும் நடைப்பந்தலிட்டார்கள். பாளைகளையுடைய பாக்குமரங்களையும் சுவைமிகுந்த கரும்புகளையும், பழுத்த குலையையுடைய வாழைமரங்களையும்வரிசை வரிசையாகக் கட்டினார்கள். ஒன்பது கோள்களும் தங்கியிருத்தலைப்போலக் கண்ணடிகளை வரிசையிட்டுக் கட்டினார்கள். கதிரவனுடைய தேர்க்குதிரைகள் அடிபடுமாறு சம்மட்டி வரிசையைப் போலக் கொடிகளை வரிசையாகக் கட்டினார்கள். மலர்களோடு குளிர்ந்த பனி நீரைத் தெளித்தார்கள். பொரிகளோடு பொன்னுலாகிய பொடியை இறைத்தார்கள். பாவை விளக்குகளை நிற்க வைத்தார்கள். பசிய மாலைகளைக் காவணங்களில் கட்டித் தொங்க விட்டார்கள். கடைத்தெரு என்று நினைக்கும்படி

தெருவெங்கும் இரத்தினமாலைகளையும் மரகதமாலைகளையும் கோவையாக அமைந்த முத்துமாலைகளையும் வரிசையாகத் தொங்கவிட்டார்கள்.

யானைகளின் நெற்றியில் சிந்தூரப் பொட்டிட்டார்கள். நெருப்புப்போன்ற மணிகள் பதித்த பட்டத்தைக் கட்டினார்கள். குதிரைகளின் காலணிகளையும் கழுத்தணிகளையும் திருத்தமுற அணிவித்தார்கள். ஒளி வீசுந்தேர்களில் குதிரைகளைப் பூட்டினார்கள். மாலைகளையும் சாமரைகளையும் தேர்களில் கட்டித் தொங்கவிட்டார்கள். பொன் தட்டுகளில் நவரத்தினங்களால் ஆகிய மங்கல விளக்குகளை ஏற்றினார்கள். பழைய அணிகளை வெறுத்துக் களைந்தார்கள். புதியனவான அணிகலன்களைப் பூண்டார்கள். குழைத்த பனி நீர் கலந்த குங்குமக் குழம்பைக் கொங்கைகளில் அப்பினார்கள். மணம் பொருந்திய கலவைகளைப் பூசினார்கள். கண்ணுக்கு மையிட்டார்கள். காலுக்குச் செம்பஞ்சுக் குழம்பு பூசினார்கள். அவ்வடிகளின் மேல் சிலம்பை அணிந்தார்கள். இவ்வாறு அணி செய்துகொண்ட மகளிர்கள் பலவாறு ஆடிப்பாடினார்கள்.

அரசமகளிரும் அந்தண மகளிரும் காஞ்சன மாலையிடம் போய்த் திருமண மங்கலச் செய்தியைக் குறித்து உசாவினார்கள். தடாதகைப்பிராட்டியாரின் திருமணக் கோலத்தைக்கண்டு களித்தார்கள். மணமக்களை நீராட்டுதற் பொருட்டுக் கங்கையாற்று நீரும், சரசுவதியாற்று நீரும், யமுனையாற்று நீரும், காவிரியாற்று நீரும் மற்றும் பல புண்ணியயாற்று நீரும் பொற்குடங்களிலே கொண்டுவரப் பெற்றன.

மதுரைமா நகரத்தவர் யாவரும் திருமணம் தங்கள் தங்கள் வீடுகளிலே நிகழ்வதைப்போல எண்ணிக் கொண்டு அந்தணாளர்கள் உண்ணுவதற்கு உணவு சமைத்தார்கள். துறவிகளைக் கண்டு, 'அடிகட்கு எங்கள் இல்லங்களிலே உணவுவகை சமைக்கப்படு

கின்றன' என்று கூறி வணங்கினர்கள். சிவனடியார்களை எதிர்கொண்டு முறைப்படி பூசனைபுரிந்தார்கள்.

திருமண மண்டபம்

தடாதகைப் பிராட்டியார் இந்திரனைப் போரில் வென்றகாலத்தில் திறையாக வாங்கிய விமான வரிசைகள் நின்றாற்போலவும், தெய்வத் தன்மை பொருந்திய மலைகளெல்லாம் வந்து அத்திருப்பதியில் எழுந்தருளிய தம் இறைவனாகிய மலையரையனின் மகளாரைக் காண நின்றாற் போலவும் விண்ணுலகத்தை யளாவும் நெடிய நிலைத்தேர்களை யாண்டும் வரிசையாக நிறுத்தினர்கள். ஏழு முழம் உயர்ந்த யானைகளைப் பளிங்கினுற் செய்து, இருபாலும் அமைத்த பொன்னுலாகிய படிகளை யுடையதும், ஒளியை வீசும் நீலமணியாற்செய்த ஆளிகளின் வரிசையை உடைய மணிகள் அழுத்திய திண்ணைகளை யுடையதும், நெருங்கினவர்களின் சாயல் வெளிப்புறத்திலே ஆடுகின்ற ஓவியப் பிரதிமைகள் போல விளங்கப் பெற்ற பளிங்கினுலாகிய ஒளி வீசும் சுவர்த்தலங்களை யுடையதும், இடையிடையே மரகதத்தாலாகிய சாளரங்களை யுடையதும், பல வடிவங்களாகச் செய்த ஆயிரம் பவளத்தூண்களை யுடையதும், அவற்றின்மேல் இந்திர நீலமணிகளால் வடிவுபொருந்தச் செய்த போதிகைகளை உடையதும், பொன்னுற்செய்த அழகிய உத்தரங்களை யுடையதும் மாணிக்க மணிகளாற்செய்த துலாங்களை யுடையதும் அமுத உடம்பினையுடைய குளிர்ந்த திங்களினது ஒளியினுல் உருக்கப்படுகின்ற சந்திரகாந்தக் கல்லால் செய்த மேனிலையை உடையதும் ஆகிய திருமண மண்டபத்தைச் செய்து முடித்தார்கள். அத்திருமண மண்டபத்திலே பாளை, பச்சிலை, பவளப் பழம், வாழை கமுகு முதலியவைகளைக் கட்டி அழகு படுத்தினர்கள். அம்மண்டபத்தைச் சுற்றி, சிறு சண்பகம் குருக்கத்தி, சண்பகம், பாதிரி முதலிய மலர்கள் நிறைந்த பூங்காவினை அமைத்தார்கள். அம்மண்டபத்திலே அட்ட மங்கலப்பொருள்களை இயந்திரங்களின் உதவியால் செய்தமைத்தார்கள். மணம் பொருந்திய

சந்தனத்தோடு குங்குமப்பூவையும் கத்தூரியையுங் கலந்து பனி நீராற்கரைத்துத் திருமண மண்டபத்தின் நிலத்தை மெழுகினார்கள். கதிரவன் மண்டலமும் நாணுமாறு பாம்புகளின் பெரிய மணிகளாகிய விளக்கு களை உருவப் பாவைகள் ஏந்தச்செய்தார்கள். ஒன்பான் மணிகளும் இடையிடையே கோவையாக அமைந்த கம்பலங்களை மேலே விரித்துக் கட்டினார்கள். திருமண மண்டபத்தின் முன்னே பெரிய பந்தரிட்டார்கள். தேவர்கள் முதலியவர்கட்குத் தகுந்த ஆசனம் அமைத் தார்கள். சிவபெருமானும் தடாதகைப் பிராட்டியாரும் இனிது அமர்ந்தருளுதற்கு, ஆறு அங்கங்களுமே கால் களாகவும், பிரணவம் அழகிய பொற்பீடமாகவும், உயர்ந்த நான்கு மறைகளாகிய நூல்களே முத்திரைல் தொடுத்து அசைகின்ற தாம்புகளாகவும் வடிவங் கொண்டு தங்கினாற்போல நவரத்தினங்கள் இழைத்த பீடம் ஒன்றை அமைத்தார்கள். திருமணத்திற்கு வேண்டிய பொருள்களையும் தொகுத்தார்கள்.

திருமணங்காண வருதல்

கொங்கு நாட்டரசர், சிங்கள நாட்டரசர் பல்லவ நாட்டரசர், சேரவரசர், கோசல நாட்டரசர், பாஞ்சால நாட்டரசர், வங்க நாட்டரசர், சோனக நாட்டரசர், சீன நாட்டரசர், சாளுவ நாட்டரசர், மாளவ நாட்டர சர், காம்போச நாட்டரசர், அங்க நாட்டரசர், மகத நாட்டரசர்,ஆரிய நாட்டரசர், சோழ நாட்டரசர்,அவந்தி நாட்டரசர், விதர்ப்ப நாட்டரசர், கங்க நாட்டரசர், கொங்கண நாட்டரசர், விராட நாட்டரசர், மராட நாட்டரசர், கருநட நாட்டரசர், குரு நாட்டரசர், கலிங்க நாட்டரசர், சாவக நாட்டரசர், கூவிள நாட்டரசர், ஒட் டிய நாட்டரசர், கடார நாட்டரசர், காந்தார நாட்டர சர், குலிங்க நாட்டரசர், கேகய நாட்டரசர், விதேக நாட்டரசர், கொல்ல நாட்டரசர், கலியாண நாட்டரசர், தெலுங்க நாட்டரசர், கூர்ச்சர நாட்டரசர், மச்ச நாட் டரசர், மிலேச்ச நாட்டரசர், செஞ்சை நாட்டரசர்,

முதலிய அரசர்கள் எல்லோரும் திருமண அழைப்பைப் பெற்றவுடன் பலவகையான ஊர்திகளில் ஏறித் தடாதகைப் பிராட்டியாரின் திருமணத்தைக் காணும் பொருட்டு மதுரைக்கு வந்து சேர்ந்தார்கள். சேர்ந்தவர்கள் தடாதகைப் பிராட்டியாரை வணங்கித் தத்தமக்கு அமைக்கப் பெற்ற இருப்பிடங்களிற் சென்று தங்கியிருந்தார்கள்.

சிவபெருமான் வருதல்

தடாதகைப் பிராட்டியாரை அனுப்பிவைத்த பிறகு சிவபெருமான் திருமணத்தின் பொருட்டு மதுரைக்குப் புறப்படத் திருவுளங் கொண்டார். இந்திரன், திருமால், நான்முகன், உருத்திரர்கள் முதலியோர் திரண்டு வரும்படி திருவுளத்தில் எண்ணினார். உருத்திரர்களும், நால்வகைப் பூதங்களும், திருமால் நான்முகன் முதலிய தேவர்களும், சிவகணத் தலைவர்களும், புலிக்கால் முனிவரும், பதஞ்சலியும், உபமன்யு முனிவரும், அகத்தியரும், சனகாதி நால்வரும், வாமதேவரும் சுகரும், வியாசரும், ஏழுமாதரும், இயக்கரும், கின்னரரும், முனிவர்களும், பூதவேதாளர்களும், தேவமாதர்களும், காலதேவர்களும் கணக்கு வழக்கற்ற பெருக்கினராய் வந்து திருக்கைலை மலையைச் சூழ்ந்தார்கள். அவர்கள் சிவபெருமானை வணங்கி ஒருபுறம் ஒதுங்கியிருந்தார்கள். சிவபெருமான் திருமணக் கோலம்கொள்வதற்குத் திருவுளங்கொண்டார். குபேரன் சிவபெருமானுக்குத் திருமணக் கோலஞ் செய்யத்தொடங்கினான். திருச்செவிகளிலே குண்டலங்களை அணிந்தான். கண்டத்திலே வயிரக்கண்டிகையை அணிந்தான். மலையிலிருந்து அருவி வீழ்தலைப்போல் விளங்குமாறு மார்பிலே முத்து மாலையை அணிந்தான். முத்துமாலையின் நடுவில் மாணிக்க மாலையைப் புனைந்தான். நான்கு திருத்தோள்களிலும் பட்டிகளைச் சாத்தினான். ஒளிவீசும் தோள்களில் தோளணிகளை அணிந்தான். யானைத் தோலாடையை நீக்கிப் பட்டாடையை அணிந்தான். அழகிய

விரல்களிலே மோதிரங்களை அணிந்தான். திருத்தோள் களிலே மலர்மாலையைச் சூட்டினன். திருவடிகளிலே சிலம்பையும் வீரகண்டையையும் அணிந்தான். பிறகு சிவபெருமான் காளையூர்தியின்மேல் ஏறித் திருமணத் திற்குப் புறப்பட்டார். தேவர்கள் மலர் மாரி பொழிந் தார்கள். தேவ துந்துபிகள் ஒலித்தன. பெருஞ்சிறப் போடு மதுரைக்குப் புறமாக வந்து சேர்ந்தார். அப் போது ஒலிக்கருவிகள்,

"தேவர்கள் தேவன் வந்தான்.
செங்கண்மால் விடையான் வந்தான்.
மூவர்கள் முதல்வன் வந்தான்.
முக்கணெம் பெருமான் வந்தான்.
பூவலர் அயன்மால் காணும்
பூரண புராணன் வந்தான்.
யாவையும் படைப்பான் வந்தான்".

என்று முழங்கின. மதுரை மாநகரத்தமைச்சர்களும் மன் னர்களும் சிவபெருமானை எதிர்கொண்டு வணங்கினார் கள். இந்திரலோகத்தினும் சிறந்து விளங்கிய மதுரை மாநகருக்குள்ளே சிவபெருமான் நுழைந்தார். மக்களனை வரும் அவரைச் சூழ்ந்து சென்றார்கள். பல்வகை ஒலிக் கருவிகளும் முழங்கத்திருமண மண்டபத்தின் வாயிலைச் சேர்ந்தார். அந்தணாளர்கள் மங்கலங் கூறினார்கள். காஞ்சனமாலை மங்கல நாணுடைய மாதரார்பலரோடும் கங்கை நீரோடும் அங்கு வந்தாள். பொன் கரகத்தில் இருந்து கங்கை நீரை மங்கைமார்கள் வார்க்கச் சிவ பெருமானுடைய திருவடிகளை விளக்கி அந்நீரைத் தன் தலையில் தெளித்துக்கொண்டதுடன் உள்ளும் பரு கிக் களிகூர்ந்தாள். திருவடிகளின் ஈரத்தை வெண்பட்டால் மாற்றினாள். சந்தன முதலிய நறு மணப் பொருள்களை அப்பினாள். மலர் முதலியவைகளை அணிந்தாள். பிறகு சிவபெருமானைப் பார்த்து, "அடி

யாளாகிய யான்பெற்ற தடாதகையைத் திருமணஞ் செய்து, இந்த அழகிய நகரின் செல்வத்தையும் இந்த நாட்டையும் தேவரீர் கைக்கொண்டு தேவரீர் ஆண் டருள்க'' என்று வேண்டிக்கொண்டாள். பிறகு சிவ பெருமான் திருமண மண்டபத்தை அடைந்து தமது பீடத்திலே அமர்ந்தருளினர். தேவர்களையும் அவரவர் கட்குரிய இடத்தில் இருக்குமாறு கடைக்கண் சாத்தி யருளினர்.

தடாதகை மணக்கோலம் கொள்ளுதல்

தடாதகைப் பிராட்டியார் திருமணக் கோலம் கொள்ளத் திருவுளங் கொண்டருளினர். திருமகளும் கலைமகளும் தம் கைத்திறமைகளையெல்லாம் காட்டிப் பிராட்டியாரை அழகு செய்யத் தொடங்கினர். அடி களில் செம்பஞ்சுக் குழம்பை ஊட்டினர். கூந்தலில் வாசக் காசறையை வழியப்பூசினர். கொங்கைகளின் முகட்டில் சந்தனத்தைப் பனி நீரில் கரைத்துச் சொரிந் தனர். திருவடிகளில் பாதசாலத்தையும் கிண்கிணியை யும் அணிந்தனர். முப்பத்திரண்டு கோவையாகக் கோத்த விரிசிகை, இருபத்தொரு கோவையாகச் செய்த கலாபம், பதினன்கு கோவையாக இயற்றிய பருமம், எட்டுக் கோவையாகச் செய்த அழகிய மேகலை, இரண்டு கோவையாகச் செய்த காஞ்சி என்னும் இவ்வேறுபாடுகளையுடைய ஐந்து அணிகளையும் இடையிலே அணிந்தனர். மெல்லிய விரல்களில் மோதி ரத்தை அணிந்தனர். கைகளுக்குக் கடகங்களை இட்ட னர். தோள்களில் தொடிகளைச் சேர்த்தனர். மரகத மாலை, பொன்மாலை, பவளமாலை, முத்துமாலை ஆகிய வைகளை மார்பில் அணிந்தனர். இரண்டு திருச்செவி களில் மகர குண்டலங்களைப் பூட்டினர். மயிர்ச்சாந் தணிந்த கூந்தலின்மேல் மாலையைச் சூட்டினர். கற்பக தரு அளித்த இந்த அழகிய அணிகளையெல்லாம் செவ் வையாக அணிந்தபின் திருமகளும் கலைமகளும் பிராட் டியை வணங்கி நின்றனர்கள். பிறகு அப்பிராட்டியைப்

அழைத்துக்கொண்டு புறப்பட்டனர். மகளிர் பலர் மங்கலப் பொருள்கள் பலவற்ருேடு பிராட்டியாரைச் சூழ்ந்து சென்றனர். பிராட்டியார் இறைவன் பக்கத்திற் சென்று அமர்ந்தருளினுர். இறைவனுக்குப் பக்கத்தில் தடாதகைப் பிராட்டியார் அமர்ந்திருந்த காட்சி கற்பகதருவுக்குப் பக்கத்தில் காமவல்லிக் கொடி படர்ந்திருந்தாற் போன்றிருந்தது.

திருமணம்

திருமால் பொன் கரகத்தில் இருந்த நீரினுல் சிவபெருமானுடைய திருவடிகளை விளக்கிச் சந்தனத்தையும் மலர்களையுஞ் சாத்தித்தூப தீபங்காட்டி வழிபட்டு இறைவனுடைய அருளைப்பெற்று நின்ருர். சிவபெருமானுடைய திருவடிகளை விளக்கிய புனித நீரைத் தேவர்கள் பெற்று உள்ளும் புறமுந்தூயரானுர்கள். திருமால் சிவபெருமானது திருக்கையிலே தடாதகைப் பிராட்டியாரின் திருக்கையை வைத்து அரிய மறைமொழிகளைக் கூறிக் கரக நீரைத்தாரை வார்த்தார். தேவர்கள் சிவபெருமானை வணங்கிப் பூமழை பொழிந்தார்கள்.

அந்தச் சமயத்திலே அரம்பையர்கள் ஆடினுர்கள். வித்தியாதரர்கள் அமுதம் போன்ற இசையைப் பாடினுர்கள். முனிவர்கள் 'அரகர' என்று ஆரவாரித்து முழங்கினுர்கள். தேவர்கள் புளகாங்கிதம் அடைந்தார்கள். சிவகணத்தவர்கள் தமது கைகளைத் தலைமேலே குவித்துப் போற்றினுர்கள். எல்லோரும் திருமண இன்பக்கடலில் அமிழ்ந்தார்கள். தேவர்களும் முனிவர்களும் மற்றையோரும் குங்கும நீரில் நனைந்த அரிசியை வீசி வாழ்த்தினுர்கள். காமதேனுவின் இனிய பாலையும் பழத்தையும் இறைவனுக்கு நிவேதித்தார்கள். சிவபெருமான் புன்னகை பூத்தருளினுர். முனிவர்களின் மனைவியரும் திருமகளும் கலைமகளும்

மங்கலம் பாடத்தொடங்கினுர்கள். நான்முகன் மறை, முறைப்படி மணத்தீ வளர்த்துத் திருமண வேள்வி யைச் செய்தான். வேள்வித்தீ மேலெழுந்தோங்கியது. நான்கு பக்கங்களினும் நான்கு மறைகள் ஒலிக்கவும், பலவகை ஒலிக்கருவிகள் முழங்கவும் சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாரின் திருக்கழுத்திலே திரு மங்கல நாணைப் பூட்டித் திருக்கைகளைப் பற்றி யருளினுர்.

பிறகு இறைவன் பிராட்டியாரோடு திருக்கையில் பொரியை வாங்கித்தீயிற்சொரிந்தார். முனிவர்கட்குத் தக்க தானங்களைச் செய்து முறைப்படி தீயை வலஞ் செய்தார். அதன் பின் செம்பொன்னுல் ஆகிய அம்மியின்மேல் தேவியாரது திருவடித் தாமரை மலரைத் திருக்கையாற்பற்றி மறைமொழியோடு தூக்கிவைத்து, "வசிட்டன் மனைவியாகிய அருந்ததி எங்கே?" என்று கேட்டார். அருந்ததியானவள் கைகளைக் கூப்பி எதிரே வந்தாள். அவள்மீது அருட் கண் சாத்தியருளித் திருமணச் சடங்குகளையெல்லாம் இனிது முடித்தார். பிறகு நான்மறைகள் ஒலிக்கவும் மங்கையர்கள் வாழ்த்துக் கூறவும் தடாதகைப் பிராட்டியாரோடு திருமண வறையில் புகுந்தருளினுர்.

முடிவு

மக்கள் சிவபெருமானது திருமணக் கோலத்தைப் பார்த்துத் தேவர்களைப் போலாயினர். சிவபெருமான் திருமண அறையைவிட்டு வெளிப்பட்டுத் திருமண மண்டபத்தை அடைந்து அரியணையில் அமர்ந்து எல் லோருக்கும் திருமண வரிசைகளை வழங்கி யருளினுர். பிறகு தேவர்களைத் தத்தம் இருப்பிடங்கட்கு அனுப்பி விட்டுத் தாம் சோமசுந்தர பாண்டியனுகிப் பாண்டிய நாட்டு அரசியலை மேற்கொண்டருளினுர்.

28 AUG 1956

வாழ்த்து

மல்குக வேத வேள்வி

—வழங்குக சுரந்து வானம்

பல்குக வளங்கள் எங்கும்

—பரவுக அறங்கள் இன்பம்

நல்குக உயிர்கட் கெல்லாம்

—நான்மறைச் சைவம் ஓங்கிப்

புல்குக உலகம் எல்லாம்

—புரவலன் செங்கோல் வாழ்க.

Rajan Electric Press, Madras 1.